මධ්‍යම පළාත් සභාවේ රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව
மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழு
Public Service Commission of Central Provincial Council

අංක 244, කටුගස්තොට පාර, මහනුවර
இல. 244, கடுகஸ்தொட்டை வீதி, கண்டி
No. 244, Katugasthota Road, Kandy.

web site: *www.psc.cp.gov.lk*
e-mail: *psc.cp.gov@gmail.com*

කාර්යාලය / காரியாலயம் / Office	081-2213097	ලේකම් / செயலாளர் / Secretary	081-2213096	සහකාර ලේකම් / உதவி செயலாளர் / Asst. Secretary	081-5631321	ෆැක්ස් / பெக்ஸ் / Fax	081-2213082
මගේ අංකය / எனது இல. / My No.	CPC/PSC/**10**/SUP/LIMITED - **2025**	ඔබේ අංකය / உமது இல / Your No.				දිනය / திகதி / Date	**2025.09.**

மத்திய மாகாண சபையின்,
பிரதான செயலாளர்,
ஆளுநர் செயலாளர்,
அனைத்து அமைச்சுச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
நிறுவனத் தலைவர்களுக்கு,

மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.07.11 ஆந் திகதிய 2,445 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேற்குறிப்பிட்டுள்ள பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அவ்வறிவித்தலை மத்திய மாகாணத்திற்கு ஏற்புடையாக்குவதற்கு ஆளுநர் செயலாளின் இல. ஜீசீபீ/01/1/1 மற்றும் 2025.07.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் மேற்குறிப்பிட்டுள்ள பரீட்சை அறிவித்தலினை வெளிவிடுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் இல. 5/4/2/9/2025 மற்றும் 2025.09.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணக்கப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளது.

02. அதனடிப்படையில், மத்திய மாகாண அரச சேவைக்குரிய உள்ளக அறிவித்தல் www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வறிவித்தல் மற்றும் மத்திய மாகாண கௌரவ. ஆளுநரினால் 2014.04.07 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு 2013.04.02 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக்குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைய, உங்களது நிறுவனத்தில் சேவையாற்றும் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையிலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய, இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ள இணைப்பின் மூலம் நிகழ்நிலையினூடாக (Online) விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், நிகழ்நிலையினூடாக சரியாக பூர்த்தி செய்து தரவிறக்கம் செய்து பிரதியெடுத்த விண்ணப்பத்தினை 2025.10.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் இவ்வாணைக்குழுவிற்கு அனுப்புமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. எவ்வாறாயினும் அதன் பின்னரான தடவைகளில் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சைக் கட்டணம் ரூபா. 1200.00 இனை செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்தை விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு நிகழ்நிலை முறைமையினூடாக வழங்கப்படும் கட்டணம் செலுத்தும் முறையின் மூலம் மாத்திரம் கட்டணங்கள் செலுத்துமாறு விண்ணப்பதாரர்களை தெளிவூட்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ ஆணைக்குழுவின் கட்டளைப் படி

திரு. கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை